4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **97 / 2022** நாள்: **20.02.2025** **வா.சா.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **லட்சுமணசாமி** | தொழில் | : கொத்தனார் |
| த/பெ | : பழனிச்சாமி | கிராமம் | : கொடிங்கியம் |
| வயது | : 35 | தாலுகா | : உடுமலைபேட்டை |
| | | மாவட்டம் | : திருப்பூர் |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

முதல் விசாரணை -

நான் இந்த வழக்கில் வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன். வா.சா.ஆ.16 கிரைய ஒப்பந்தத்தில் மூன்றாவதாக கையெழுத்து போட்டுள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–C.Rajalingom,B.A.,B.L.,
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.